Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்-வாராந்த பாடசாலை

வாரம்:- ஜுலை 12-18

**பாடம்**: தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

**தரம்**: 08

**தயாரிப்பு**: திருமதி.J.Lநிரோஷனி
இ/எம்பி/ஸ்ப்ரிங்வுட் த.வி இறக்குவானை

## அலகு 4 : செய்நிரலாக்கம

- கீழே காணப்படுகின்ற பிரசினங்களை ஆராய்ந்து உள்ளீடு, முறைவழியாக்கம், வருவிளைவு ஆகியவற்றை வேறுபடுத்தி காட்டவும்.

1. வயது 18 அல்லது அதற்கு அதிகம் எனின் "வாக்குச் செலுத்த முடியும்." 18 இலும் குறைவு எனின் "வாக்குச் செலுத்த முடியாது."
2. இரண்டு குழுக்களிடையே நடைபெறும் போட்டியொன்றில் ஏதாவது ஒரு குழு வெற்றி பெறுதல் அல்லது வெற்றி தோல்வியின்றி முடிவடைதல்.
3. 5 பேனைகளை கொள்வனவு செய்வதற்கு செலுத்தவேண்டிய பணத்தினை கண்டறிதல்
4. பட்டம் ஒன்று தயாரித்தல்
5. இரண்டு எண்கள் தரப்படுமிடத்து இரண்டு எண்களின் கூட்டுத்தொகையை பெறல்.
6. வினாப்பத்திரம் ஒன்றில் 35 புள்ளிகளுக்கு மேல் பெறுவாராயின் "சித்தி" எனவும் 35 புள்ளிகளுக்கு குறைவாக பெறுவாராயின் "சித்தியின்மை" எனவும் காட்சிப்படுத்தல்.
7. செவ்வகம் ஒன்றின் நீளமும் பரப்பளவும் தரப்படுமிடத்து அதன் அகலத்தை கண்டறிதல்.
8. முக்கோணம் ஒன்றின் பரப்பளவை காணல்.
9. இலக்கம் ஒன்று தரப்படுமிடத்து அது ஒற்றை எண்ணா? இரட்டை எண்ணா? கண்டறிதல்.
10. கணக்கிலிருந்து பணம் எடுக்கும் போது கணக்கு மீதியை விட குறைந்த தொகையை கேட்கும் போது பணத்தை பெறல் அல்லது கணக்கு மீதியை விட அதிக தொகையை கேட்கும் போது "மீதி போதுமானதாக இல்லை" என காட்சிப்படுத்தல்.